156

உ

சிவமயம்.

நவக்கிரகத் தோத்திரம்
சனிபகவான் தோத்திர

இஃது

ராயவேலூர்:

பகடால-முனிரத்தினம் நாயுடு,

அவர்களாற் றமது

ஷ்ண விலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1916.

Q2:417
N16
142428

ஸ்ரீதேவிசகாய ஜோதிஷ் இந்து
வைத்தியசாலா.

பயித்திய விமோசன தைலம்

பாட்டல் 1-க்கு விலை ரூபா 5—0—0.

V. P. T. துரைஸாமி அய்யங்கார்,
ஜோதிஷ் இந்து வைத்தியம்

ஸ்ரீதேவிசகாய ஜோதிஷ் இந்து
வைத்திய சாலா.

தாதுபுஷ்டி ஷர்பத்து

பாட்டல் 1-க்கு விலை ரூபா 2—0—0

V. P. T துரைஸாமி அய்யங்கார்,
ஜோதிஷ் இந்து வைத்தியம்.

உ

கடவுள் துணை.

நவக்கிரகத் தோத்திரம்.

காப்பு.

னுளுயிர் கட்கனைத்து மாறுதளித்து நல
னு நவக்கிரக நண்புசொல்லத்—தண்ணுலவு
ாணி தங்குமுயர் செஞ்சடை யருண்மகிழ் செய்
கயரு ளைங்கரனார் காப்பு.

சூரியன்.

னி யிருளைநீக்குங் கதிரொளியாகி யெங்கும்
னை யுலகோர்போற்றப் புசிப்பொடு சுகத்தைநல்கும்
யேழுடைய தேர்மேன் மகாகிரி வலமாய் வந்த
கோ வெனைரட்சிப்பாய் செங்கதிரவனேபோற்றி. (1)

சந்திரன்.

லைகட லதனினின்று மன்றுவங் குதித்தபோது
வ்வளர் திங்களாகிக் கடவுளென் றெவரு மேத்துஞ்
நுத லுமையார் பங்கன் செஞ்சடை பிறையாய்மேரு
வலமாக வந்த மதியமே போற்றி போற்றி. (2)

செவ்வாய்.

வசனநற் றைரியத்தோடு மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்கிரமங்கள் போர்தனில் வெற்றியாண்மை
நிசமுட னவரவர்க்கு நீணிலந்தனி லளிக்குங்
குசனில மகனுஞ் செவ்வாய் குரைகழல் போற்றி போற்றி (3)

புதன்.

மதன னூன் முதலா நான்கு மறை புகல் கல்வி ஞானம்
விதமுட னவரவர்க்கு விஞ்சைகளருள்வோன் றிங்கள்
சுதன் பல சுபாசுபங்கள் சுகம் பல கொடுக்கவல்லன்
புதன்கவிப் புலவன்சீர்மால் பொன்னடி போற்றி போற்றி.(4)

குரு.

மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க்கரசன் மந்த்ரி
நறைசொறி கற்பகப் பொன் னாட்டினுக் கதிபனாகி
நிறைதனஞ் சிவிகை மண்ணி னீடுபோகத்தை நல்கு
மிறைபவன் குருவியாழ மிருமலர்ப் பாதம் போற்றி.(5)

சுக்கிரன்.

மூர்க்கவான்சூரன்வாணன் முதலினோர் குருவாய்வையங்
காக்கவான் மழைபெய்விக்குங் கவிமகன் கனகமீவான்
றீர்க்கவானவர்கள்போற்றச் செத்தவர்தமையெழுப்பும்
பார்க்கவன் சுக்ராசாரி பாத பங்கயமே போற்றி. (6)

சனி.

முனிவர்கடவமே மும்மூர்த்திகண் முதலினோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வுன் மகிமைய தல்லாதுண்டோ
க[illegible]வுள தெய்வநீயே கதிர்சேயே காகமேறுஞ்
சனியனே யுனைத்துதிப்பேன் ரமியனேற் கருள்செய்வாயே. (7)

இராகு.

[illegible]குசேர் நெடுமான் முன்னம் வானவர்க் கமுதமீயப்
போகுமக் காலேயுன்றன் புணர்ப்பினுற் சிரமேயற்றுப்
பாகுசேர் மொழியாள் பங்கன் பரன் கையில் மீண்டும் பெற்ற
ராகுவேயுனைத் துதிப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே (8)

கேது

பொன்னைத்தன்னுரத்திற்கொண்டோன் புலவர்தம்பொருட்டா
தன்னையே கடைந்துமுன்னந் தண்ணமுதளிக்கலுற்ற [வாழி
பின்னை[illegible] சரவானுண்ட பெட்பினிற் சிரம்[illegible]பற் றுய்ந்தா
யென்னையாள் கேதுவே யிவ்விருநிலம் போற்றத்தானே. (9)

பொது.

சூரியன் சோமன் செவ்வாய் சொற் புதன் வியாழம் வெள்ளி
சாரியு மிராகு கேது கடவுள ரொன்பா நாமத்
தாரியல் சக்கரத்தைத் தரித்திரர் பூசித்தாலும்
பாரினிற் புத்திரரு மட்ட பாக்கியமு நல்குந்தானே.

நவக்கிரகத்தோத்திரம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

சனிபகவான் தோத்திரம்.

காப்பு - வெண்பா.

தேவரெண்டிக் கதிபர் சித்தரொடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலோரை - மேவியுறுந்
தாரணிந்தமார்பன் சனிபகவான் சீர்புகலக்
காரணிந்த யானைமுகன் காப்பு.

ஆதிவேதாந்த முதலறியஞான வைந்தெழுத்தி
னுட்பொருளை யயன்மாறேடும்
சோதி சிற்றம்பலத்தி லாடிநின்ற
சுடரொளியை நீபிடித்த தோஷத்தாலே
பாதிமதி சடைக்கணிய வரவாபூணப்
பதியிழக்கச் சுடலைதனிற் பாடியாடச்
சாதியில்லா வேடனெச்சிற் றின்னவைத்தாய்
சனியனே காகமேறுந் தம்பிரானே. (1)

வேலவனை வேங்கைமர மாக்கிவைத்தாய்
விரகுகட்டுச் சொக்கர்தமை விற்கவைத்தாய்
மாவினையே யுரலோடு கட்டிவைத்தாய்
வள்ளிதனைக் குறவரது வனத்தில்வைத்தாய்

காலனை மார்க்கண்டனுக்கா வானுரைத்த
காரணமு நீபிடித்த கருமத்தாலே
காலவுனை யான்றொழுதே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே. (2)

அஞ்சுதவ மயோத்தியில்வாழ் தசரதன்றன்
மக்களையும் வனவாச மாக்கிவைத்தாய்
பஞ்சவர்கள் சூதினாற் பதியிழந்து
பஞ்சுபடும் பாடவர்கள் படச்செய் வித்தாய்
எஞ்சலிலா வரிச்சந்த்ரன் பெண்டைவிற்றே
யிழிகுலத்தி லடிமையுற விசையவைத்தாய்
அஞ்சமென்றே யுனைபடுத்தே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே. (3)

அண்ட மாயிரத்தெட்டு மரசு செய்த
வடல்சூர பதுமனையு மடக்கிவைத்தாய்
மண்டலத்தை யாண்ட நளச்சக்ரவர்த்தி
யனைவியொடு வனமதனி லலையச்செய்தாய்
விண்டலத்தை பானுகோபன் றன்னாலே
வெந்தணலாகச் சுரரை வெருவச்செய்தாய்
தெண்டனிட்டே னெந்நாளு மெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே. (4)

அண்டர்கோன் மேனியிற் கண்ணுக்குவித்தா
யயன்சிரத்தை வைரவனு லறுத்துவித்தாய்
திண்டிறல்கொள் கௌதமனு லகலிகையைத்
தான் சிலையாகச் சாபமுறவே செய்வித்தாய்
தண்டரள நகையிரதி மாரன்றன்னைச் சங்கரனுர்
நுதல் விழியாற் றணல் செய்வித்தாய்
சண்டமிலா துனைத்தொழுதே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே (5)

பாருலவு பரிதையைப்பல் லுதிர்த்துவித்தாய்
பஞ்சவர்க்குத் தூது பீதாம்பரனை வைத்தாய்
தாருலவு சுக்ரீவன் றம்மைத்
தாரையினுற் றீராத சமர்செய்வித்தாய்
சூரனெனு மிலங்கை யிராவணன்றன் றங்கை
சூர்ப்பனகி மூக்குமுலை துணிசெய்வித்தாய்
தாரணியு மணிமார்பா வெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே. (6)

சுக்கிரன்றன் கண்ணிழந்தா னுலகையாண்டு
துலங்கு மிராவணன் சிரங்கண்டிக்க வீழ்ந்தான்
மிக்கபுக ழிரணியன்றன் வீறிழந்தான்
வியங்கு திரிபுராதிகளும் வெந்துமாண்டார்.

சக்கரத்தா லுடலறுந்தான் சலந்தரன்றன
றுருகாசூர னுமே சமரின்மாண்டான்
தக்கன்மிகச் சிரமிழந்தா னின்றேஷத்தார்
சனியனே காகமேறுந் தம்பிரானே. (7)

அந்தமுள்ள வைங்கரன் கொம்பரவே செய்தா
யருமுனிவர் மனைவிகள் கற்பழியச்செய்தாய்
சந்திரன் கலையழிந்து தழைக்கச்செய்தாய்
சங்கரனைப் பிச்சைதா னெடுக்கச்செய்தாய்
தந்திமுகச் சூரனுயிர் தளரச்செய்தாய்
சாரங்கதரன் கரங்காற் றரிக்கச் செய்தாய்
சந்ததமு முனைப்பணிவே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே. (8)

சீதைதனை யிராவணனற் சிறைசெய்வித்தாய்
தேவர்களைச் சூரனற் சிறையிற்சேர்த்தாய்
மாதுதுரௌபதை துகிலை வாங்குவித்தாய்
மகேச்சுரனை யுமைபிரியும் வகைசெய்வித்தாய்
போதிலயன் றனீற்றனை பூட்டுவித்தாய்
பொதியையினி லகத்தியனைப் பொருந்தச்செய் [தாய்
்துசேர் மலர்மார்பா வெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே. (9)

அப்பர்தமைக் கருங்கல்லோ டலையிற்சேர்ந்தா
யரனடியின் முயலகனை யடங்கச்செய்தாய்
செப்புமாணிக்கர்தமைச் சிறையிலிட்டாய்
சீதரனை மச்சவுரு வெடுக்கச்செய்தாய்
ஒப்பி லனுமான் வாலிலொளித் தீயிட்டாய்
யொலிகடலி னஞ்சையர னுண்ணவைத்தாய்
தப்பிலா துனைத்தொழுதே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

நீரினை யுண்டெழு மேகவண்ணா போற்றி
நெடுந்தடத்தி லுறுகமலக் கண்ணாபோற்றி
சூரியன்றன் றவத்தில்வந்த பாலாபோற்றி
துலங்கு நவக்கிரகத் துண் மேலாபோற்றி
காரியெனும் பெயர்கொளு ளுபகாரா போற்றி
காசினியிற் கீர்த்திபெற்ற தீராபோற்றி
மூரிகொளு நோய்முகவா முடவாபோற்றி
முதுமகனின் முண்டகத்தாள் போற்றி போ

சனிபகவான் தோத்திரம்
முற்றிற்று.

—

ஸ்ரீதேவிசகாய ஜோதிஷ் இந்து
வைத்திய சாலா.

தீராதவெட்டைநோய்சங்கார

பாட்டல் 1-க்கு விலை ரூபா 1—8—0

V. P. T. துரைஸாமி அய்யங்கார்,
ஜோதிஷ் இந்து வைத்தியம்

ஸ்ரீதேவிசகாய ஜோதிஷ் இந்து
வைத்திய சாலா.

வாதாமி ஷர்பத்

பாட்டல் 1-க்கு விலை ரூபா 1—8—

V. P. T. துரைஸாமி அய்யங்கார்,
ஜோதிஷ் இந்து வைத்தியம்